International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 01 January to March 2020 www.irjtsjournal.org

# சிலப்பதிகாரத்தின் மூன்று உண்மைகள் - மறுவாசிப்பு

முனைவர் உ.கருப்பத்தேவன்
*உதவிப்பேராசிரியர் & தலைவர் (பொ)*
*ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21.*

**முன்னுரை**

சிலப்பதிகாரக் காப்பியத்தின் அடிப்படைத் தத்துவங்கள், நோக்கங்கள் மூன்று எனச் சிலப்பதிகாரப் பதிகம் கூறுகின்றது. இந்த மூன்று நோக்கங்களின் உண்மைகளைத் திறனாய்வு செய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. 'இலக்கியம்' என்ற அடிப்படையில் அமையும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் நோக்கங்கள் அதன் சமூக வரலாற்றுப் பின்புலத்தில் பல்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. பேரரசு உருவாக்கம், அதன் அரசியலைக் கட்டிக்காப்பது என்பதே இந்நோக்கங்களில் மறைமுகமாகப் புனைந்து காணப்படுகின்றன.

**சிலப்பதிகாரப் பதிகத் தொடக்கம்**

சிலப்பதிகாரத்தின் பதிகம்,

> ***"குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த***
> ***குடக்கோச் சேரல் இளங்கோவடிகள்"*** [1]

எனத் தொடங்குகின்றது. ரகுநாதன் என்னும் சிலப்பதிகாரத் திறனாய்வாளர் பதிகம், பாயிரம் என்னும் வழக்காறுகள் மிகவும் பிற்காலத்தது என்பார்.[2] இது குறித்த ஆய்வு விரிவானது. ஆயினும் இப்பதிகம் இளங்கோவடிகள் அரசு துறந்து துறவியான நிகழ்ச்சியை இப்பதிகம் சுட்டிக்காட்டுகின்றது. இளங்கோவடிகளுக்கு மூத்தவனாகிய சேரன் செங்குட்டுவன் இருக்கும்போது இளையவனாகிய இளங்கோவடிகளே அரசனாவான் என்று சோதிடன் கூறியமையால், அதனை ஏற்காத இளங்கோவடிகள் துறவியாகின்றார். இது கதையே ஆயினும், இக்கதையின் கரு ஆழமாகச் சிந்திக்கத்தக்கது.

அரசினைத் துறந்து துறவியான இளங்கோவடிகள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். துறவியான அவர் ஆசையின்றிப் பற்றற்று இருப்பார்; அவருக்குத் துறவும் ஆட்சியும் ஒன்றே எனக் கொண்டாலும், மறுபுறம் அரசாட்சி மரபுப்படி மூத்தவனையே சேரவேண்டும்; மூத்தவனுக்குச் சேராதபடி ஏற்படும் தடைகள் களையப்பட வேண்டும் என்பதை அறியலாம். பேரரசு தெய்வத்தன்மையுடையது என்னும் நிலைப்பாடு அன்று இருந்தது. இம்மரபு ''அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்னும் புறநானூற்றுப் பாடல் வரியால் உணரலாம்.

**மூன்று உண்மைகள்**

சிலப்பதிகாரத்தின் அடிப்படை உண்மைகள் மூன்று எனப் பதிகம் கூறுகின்றது. அவை வருமாறு:

> ***"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்***
> ***உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்***
> ***ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"*** [3]

இப்பதிக வரிகள் சிலப்பதிகாரக் காப்பியப் போக்கிற்கும், பேரரசு உருவாக்க நெறிக்கும் உரிய அடிப்படை உண்மைகளாகும். அரசியலில் நெறிமுறை பிழைத்தோர்க்கு அறமே எமனாகும் என்பதும், அனைத்து வினைகளுக்கும் காரணம் ஊழ்வினையே என்பதும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

**கோவலன் கள்வன்**

கோவலன்மீது சிலம்பு திருடிய கள்வன் எனக் குற்றம் சாட்டப்படுகின்றது. அக்குற்றத்தை அரண்மனைப் பொற்கொல்லன், மன்னன் அந்தப்புரம் நோக்கி பாண்டிமாதேவியின் ஊடல் தீர்க்க விரைந்து செல்லும் வழியில் அவனிடம் கூறுகின்றான். பாண்டிய மன்னன் ஊர்க்காவலர்களை அழைத்து,

***"தாழ்பூங் கோதை தன்காற்சிலம்பு***
***கன்றிய கள்வன் கையது ஆகில்***
***கொன்றச் சிலம்பு கொணர்க"*** [4]

என ஆணை இடுகின்றான். இந்த வரிகளுக்கு உரையெழுதும் அடியார்க்கு நல்லார் "அவனைக் கொல்ல அச்சிலம்போடு ஈங்குக் கொணர்க எனக் கருதியவன் (பாண்டியமன்னன்), வினைவிளை காலம் ஆதலின் கொன்று அச்சிலம்பு கொணர்க என்றான்" எனக் கூறுவார். அடியார்க்கு நல்லார் கூற்றுப்படி "கள்வனாகிய அவனைக் (கோவலன்) கொல்வதற்கு இங்கு அழைத்து வருக" என்றே பாண்டிய மன்னன் கருதியதாகவும், ஆனால் ஊழ்வினை வசத்தால் வாய்தவறி அவ்வாறு கூறியதாகவும் கருதமுடிகின்றது. வினைவிளை காலமாதலின் மன்னனது விசாரணை இன்றியே கோவலனுக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது. இங்கு மன்னனது குற்றம் ஊழ்வினைமேல் சுமத்தப்பட்டு குற்றவாளியாகி பாண்டிய மன்னன் விடுதலை செய்யப்படுகின்றான்.இருப்பினும் கோவலன் 'கள்வன் அல்லன்' என்பதைக் கண்ணகி வழக்குரைத்ததில் உணர்ந்த மன்னன் தன் தவற்றை உணர்ந்து உயிர்துறக்கின்றான்.

***"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்***
***பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட***
***யானோ அரசன் யானே கள்வன்***
***மன்பதை காக்கும் தென்புலங் காவல்***
***என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென***
***மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே"*** [5]

மன்னவன் தவறு செய்துவிடுகின்றான். இதனால் அவனது வெண்கொற்றக்குடை தாழ்கின்றது. செங்கோல் தளர்கின்றது. பொற்கொல்லன் சொல்லைக் கேட்டதனால் இத்தவறு நிகழ்ந்துவிடுகின்றது. இதனால் இதுவரை மக்களைக்காத்து வந்த பாண்டியர் பரம்பரையின் ஆட்சிக்காவல் இந்த மன்னனால் பாழ்பட்டு விடுகின்றது. ஆதலால் இந்த தவற்றினைச் சரிசெய்யப் பாண்டிய மன்னன் தன்னுயிரை விட்டுவிடுகின்றான். இதிலிருந்து நாம் அறிவன:

- அரசுமுறையில் தவறு நேர்ந்தமைக்கு ஊழ்வினை மட்டும் காரணம் அன்று; பொற்கொல்லன் தன் குற்றத்தை மறைக்க மேற்கொண்ட சாதுர்யமான பேச்சே முக்கியக் காரணமாகும்.
- பாண்டியர் குடியில் / அரசாட்சியில் இதுவரையில் தவறு நிகழவில்லை. இப்பாண்டிய மன்னனால்தான் இவர்தம் தென்புலக்காவல் குற்றமுடைய தாகின்றது.
- இத்தவற்றினை ஈடுசெய்யவே பாண்டிய மன்னன் உயிர்விடுகின்றான்.'

- ❖ "கோவலன் கொலை செய்யப்படுதல்" என்னும் குற்றத்திலிருந்து பாண்டியனை விடுவிக்கும் பிறிதொரு சான்றாகச் சேரன் செங்குட்டுவன்,

***"வல்வினை வளைத்த கோலை மன்னவன்***
***செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோங்கோல் ஆக்கியது"*** [6]

எனக் கூறுவதைக் குறிப்பிடலாம். இதில் பாண்டிய மன்னன் செங்கோல் வளைந்ததற்கு "வல்வினையே" காரணம் என அழுத்தமாகக் கூறப்பெற்றுள்ளது. பேரரசு அமைப்புக்களில் இவ்வாறான கருத்துருவாக்கம் மன்னனை அவனது குற்றங்களிலிருந்து விடுவிக்கின்றன.

**மன்னவன் நீதிமுறைமையின் நம்பகத்தன்மை**

சிலப்பதிகாரத்தின் உரைபெறு கட்டுரையில்,"அன்றுதொட்டுப் பாண்டியநாடு மழை வரம்கூர்ந்து வறுமையெய்தி வெப்புநோயும் குருவும் தொடரக் கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று கள வேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கியது" என்னும் செய்தி கூறப்பெற்றுள்ளது. பாண்டிய மன்னன் இறந்ததும் மதுரை எரியூற்றப் பெற்றதும் நிகழ்ந்தபின்னர் நாடு மழையின்றி நலிந்தது. உடனே கொற்கையிலிருந்த மற்றொரு பாண்டிய மன்னன் இதற்குக் காரணமாகிய பொற்கொல்லர் ஆயிரவரைக் கண்ணகிக்குப் பலிகொடுத்ததும் நாடு நன்மையடைந்தது என்கின்றது உரைபெறுகட்டுரை. இங்கு ஒரு மன்னன் செய்த தவறு மற்றொரு மன்னனால் ஈடுசெய்யப்படுகின்றது. இதிலிருந்து,

- ❖ பாண்டிய மன்னன் உயிர் துறந்தது மட்டுமே பரிகாரமாகிவிடவில்லை. நாட்டைக்கேடு ஆக்கிரமித்து தீமை ஏற்பட்டது. உடனே கொற்கைப் பாண்டியன் ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டான். அக்கேடு நீங்கியது. இதன்வழி நாட்டில் ஏற்பட்ட தீமைகளுக்குப் பாண்டிய மன்னன் காரணன் இல்லை. பொற்கொல்லரே காரணம் என்றாகிறது.
- ❖ நாட்டில் நிகழும் கேடுகளையும் வறுமை முதலான தீங்குகளையும் ஒரு ஆட்சியாளனாகிய மன்னனால் மட்டுமே ஈடுகட்ட முடியும்.
- ❖ சேரன் செங்குட்டுவன்,

***"எம்மோர் அன்ன வேந்தர்க்கு உற்ற***
***செம்மையின் இகந்த சொற்செவிப் புலம் படாமுன்***
***உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென"*** [7]

என்கின்றான். 'எம்மையொத்த மன்னர்க்கு நீதிமுறை வழுவுவதால் உண்டான பழிச்சொல் பிறர் செவியில் சென்று கேட்பதற்கு முன்னர், அம்மன்னன் தன்னுயிரை உடம்பிலிருந்து நீக்கினசொல் சென்றடைவதாக என்று பாண்டிய மன்னன் உயிரைவிட்டமையின்' என்கின்றான் சேரன் செங்குட்டுவன். இக்கூற்று 'மன்னன்' என்னும் ஆட்சியாளன் ஆளுமையை உயர்வுடையதாக மக்களிடையே காட்சிப்படுத்தின. இது மன்னவனின் நீதிமுறைமையின் நம்பகத்தன்மையை நியாயப்படுத்தின.

**மன்னனாகப் பிறப்பது பெருந்துன்பம்**

'மன்னனாகப் பிறப்பது பெருந்துன்பம் உடையது' என்னும் கருத்து மன்னனாகிய சேரன் செங்குட்டுவனால் முன் வைக்கப்படுகின்றது.

*“மழைவளம் கரப்பின் வான்பேரச்சம்*
*பிழையுயிர் எய்திர் பெரும்பேரச்சம்*
*குடிபுரவுண்டுங் கொடுங்கோல் அஞ்சி*
*மன்பதை காக்கும் நற்குடி பிறத்தல்*
*துன்பம் அல்லது தொழுதக இல்”* [8]

மழை பெய்யாமல் பொய்த்துப்போனால் மக்களிடையே பேரச்சம் ஏற்படும். ஏதேனும் ஒரு காரணத்தால் உயிர்கள் வருந்தினாலும் பேரச்சம் ஏற்படும். குடிமக்களைப் பாதுகாத்து ஓம்பும் மன்னர்குடியில் பிறத்தல் துன்பமே என்னும் கருத்து ஒரு மன்னனின் கூற்றில் வெளிப்பட்டுள்ளது. மன்னர் வாழ்க்கை உயர்வானது; சுகமானது என்னும் கருத்திற்கு மாற்றாக, அது பெருந்துன்பம் தருவது என்னும் கருத்து பரவலாக்கப் பெற்றுள்ளது.

*“மாரிபொய்ப்பினும் வாரி குன்றினும்*
*.... ..... .....*
*காவலர்ப் பழிக்கும் கண்ணகன் ஞாலம்”* *(புறம்.34)*

என்கின்றது புறநானூற்றுப் பாடல். இங்கு மழைபொய்த்தவக்குரிய காரணங்களுள் அரசின், அரசனின் ஆட்சிமுறையும் முதன்மையான காரணம் ஆகின்றது. இக்கருத்தினையே சிலப்பதிகாரத்திற்கு முன்னரும் பின்னரும் தோன்றிய நீதிநூல்களும் வலியுறுத்துகின்றன. ஆயினும் சிலப்பதிகாரத்தில் மன்னனே இதனைக்கூறும் முறையில் ஓர் இரக்க உணர்வு தோன்றுகின்றது. இது ஒரு மன்னவின் புலம்பலாக வெளிப்படுகின்றது.

**பேரரசுகள் குறித்த குடிப்பெருமை**

சிலப்பதிகாரத்தில் கண்ணகி வாயிலாகச் சோழர் குடிப்பெருமையும், மதுராபதித் தெய்வத்தின் வாயிலாகப் பாண்டியர் குடிப்பெருமையும் கூறப்பெற்றுள்ளன. பருந்தினால் துறத்தப்பட்டுத் தன்னை வந்தடைந்த ஒரு புறாவினைக் காப்பதற்காக தன் ஊனினை அறுத்துப் பருந்திற்கு அளித்தாள் சோழமன்னனாகிய சிபிச்சக்கரவர்த்தி. மனுச்சோழன் என்னும் மனுநீதிச் சோழன் தன்மகன் ஓட்டியதேரில் அடிபட்டு இறந்த ஒரு பசுவின் கன்றிற்காக அப்பசு ஆராய்ச்சி மணியை அடித்து முறையிட அச்சோழ மன்னன் தானே தேரினை ஓட்டி அதன் வாயிலாகத் தன்மகனேயே கொன்றவன்.[9] இவ்வாறே பாண்டிய மன்னன் தன்நாட்டில் அந்தணர் ஓதும் வேதமொழியைத் தவிர, மக்கள் தம் குறைகளைத் தெரிவிக்கும் மணியின் ஓசையைக் கேட்டு அறியாதவன். பாண்டிய மன்னன் நள்ளிரவில் கீரந்தை என்னும் அந்தணன் வீட்டுக்கதவைத் தட்டினான். இதனைக் கேட்ட அந்தணன் மனைவி அரசவேலி காக்கும் என்றீர்; அவ்வேலி என்னைக் காக்காதோ என்று புலம்பினாள். அதனைக் கேட்ட பாண்டிய மன்னன் தன் உள்ளம் நடுங்கித் தன் வாளால் தன் கையைத் தானே வெட்டிக்கொண்டான். அம்மன்னனே பொற்கைப் பாண்டியன் எனப் பெருமைபடப் பேசப்படுகின்றான்.

- ❖ பேரரசின் தோற்றத்திற்கான அடிக்கட்டுமானங்களாக மன்னர்களின் குடிப்பெருமைகள் இருந்துள்ளன.
- ❖ பருந்து, புறா, பசு முதலிய உயிரினங்களுக்காக மன்னர்கள் இரக்கம் காட்டியதும், தம்மை வருத்திக்கொண்டதும், மன்னன் தன் மகனையே கொலை செய்து தண்டித்ததும் ஆகிய நிகழ்வுகள் அரசர்களாகிய மன்னர்களின் குலப்பெருமையை மக்களிடையே கொண்டு செல்ல உதவின.
- ❖ பாண்டியன் மரணத்திற்காக மதுராபதி தெய்வமே வருத்தம் அடைகின்றது; அத்தெய்வமே வழக்காடுகின்றது. நிகழ்ந்த தவறு மன்னனுடையது அன்று; அது முற்பிறப்பின் சாபம் என மதுரபதி தெய்வம் வழக்காடுவது மன்னர்குடியை பழியிலிருந்து விடுதலை செய்யவே ஆகும்.

**இனக்குழு அழிப்பும் விளிம்புநிலை மக்களும்**

சங்ககாலத்தில் திணைவாழ் மக்களாக வாழ்ந்த இடையர், குறவர், பரதவர், பாலைநில மறவர் ஆகியோர் பல்வேறு **மக்களின் அழிவு**களின் காரணமாக விளிம்புநிலை மக்களாகப் பின்தள்ளப்பட்டனர். சிலப்பதிகாரத்தின் **புறஞ்சேரி இறுத்தகாதை** இடையர் இனமக்கள் நாட்டின் மையப்பகுதியிலிருந்து துண்டிக்கப்பெற்று நாட்டின் எல்லையோரமாகிய புறஞ்சேரியில் வாழ்ந்து வந்ததைக் காட்டுகின்றது. மலைவாழ் குறவர்கள் நாட்டின் எல்லைக்கு அப்பால் வெகுதொலைவில் வாழ்ந்ததை **குன்றக்குரவை** கூறுகின்றது. பாலை நில மறவர்களைப் பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரத்தில் இல்லை. ஆதலால் நாட்டின் மையப் பகுதியில் திணைசார் இனக்குழு மக்களுக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை. இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் இலக்கிய அரசியலைச் சிலம்பு முன் வைக்கின்றது. இதன் தோற்றுவாயாகவே சிலம்புப் பதிகத்தின் மூன்று உண்மைகளும் அமைந்துள்ளன.

கானல்வரி, வேட்டுவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை முதலான சிலம்புப் பகுதிகள் விளிம்புநிலை மக்களின் பண்பாட்டையும், கலை இலக்கிய மரபுகளையும் உட்கொண்டவை. இவை செவ்வியல் மரபாக மாற்றுப்பட்டு நவீனப் பண்புகளுடன் சிலம்பில் இடம் பெற்றுள்ளன. இதில் சமய ஒருமுகப் போக்கும் காணப்படுகின்றது. வேட்டுவவரியில் கொற்றவை வழிபாடு நிகழ்கின்றது. கொற்றவை சிவன் மனைவியாகவும் திருமாலின் சகோதரியாகவும் ஆக்கப்படுகின்றாள். குன்றக்குரவையில் முருகன் சிவன் மகனாக ஆக்கப்படுகின்றான். இவற்றை விளிம்புநிலை மக்களின் **'மேல்நிலை ஆக்கம்'** எனக் கொள்ளலாம். இளங்கோவடிகளின் இம்முயற்சி விளிம்புநிலை மக்களை ஒரு சமயத்தின் கீழ் கொண்டுவந்து, ஒரு குடையின் கீழ் இணைப்பதே. விளிம்புநிலை மக்களை ஒன்றிணைத்தல், அவர்களுக்கு ஏற்புரிமை வழங்கல், பேரரசோடு இணைத்துக்கொள்ளல் என்னும் அரசியல் சித்தாந்தங்களின் அடிப்படையிலேயே வரிப்பாடல்களும் குரவைப் பாடல்களும் சிலம்பில் இடம்பெற்றுள்ளன.

சங்ககாலத்தில் ஆநிரை கவர்ந்து வந்து 'பாதீடு' வாயிலாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இது சிலம்பில் விளிம்புநிலை மக்கள் அரசிற்குச் செலுத்தும் "திறை" என்னும் வரியாயிற்று. 'பாதீடு' என்னும் பொதுப்பகிர்வு முறை சிலம்பில் அரசுக்குச் செலுத்தும் திறை என்னும் வரியாயிற்று. ஆய்ச்சியர் குரவையில் அரண்மனை மணியில் ஒளியைக்கேட்ட ஆயர் இன்று அரண்மனைக்கு நெய்தரும் முறை தம்முடையது என நினைத்து விரைந்து செயல்படுகின்றனர். குன்றக்குரவையில் மலைவளம் காணவந்த சேரன் செங்குட்டுவனுக்குத் திறையாக குறவர்கள் மலைவிளை பொருட்களைக் கொண்டு வருகின்றனர்.

**உரைசால் பத்தினி கண்ணகி**

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலைவடிப்பது (படிமம்) இனக்குழுப் பண்பாட்டு மரபின் குறியீடாக அமைகின்றது. சோழ நாட்டில் உயர்தர வணிகர் குடியில் பிறந்த கண்ணகி தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றான். கற்புக்கடம்பூண்ட பொற்புடைத் தெய்வம் ஆகின்றாள். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குப் படிமம் (சிலை) வடிப்பதற்குக் கல்எடுக்க வட இந்தியப் பயணத்தை மேற்கொள்கின்றான். வட இந்திய மன்னர்களுக்கும் சேரனுக்கும் பெரும்போர்கள் நடைபெறுகின்றன. இவற்றில் பெற்ற சேரன் செங்குட்டுவன் வடஇந்திய மன்னராகிய கனகவிசயர் தலையில் கல்லைச் சுமத்திச் சேரநாடு திரும்புகின்றான். இதனால் உரைசால் பத்தினியாகிய கண்ணகியின் பெருமை உலகறியச் செய்யப்படுகின்றது. மறுபுறம் பார்த்தால் இப்போர் பற்றிய நிகழ்வுகள் அனைத்தும் இனக்குழு வாழ்க்கையில் ஆநிரை கவர்ந்து போரிட்டு மடிந்த நிகழ்ச்சிகளான காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்தல் என்ற பெயர்களைப் பெறுகின்றன.

இப்பெயர்கள் அனைத்தும் இனக்குழுச் சமுதாய வாழ்க்கையில் ஆநிரைகளைக் கவர்ந்து போரிட்டு இறந்த மறவர்களாகிய வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபாடு நிகழ்த்துதல் பற்றியதாகும். இனக்குழு வாழ்க்கையின் போர்முறைகள் பற்றிய இப்பெயரீடுகள், பேரரசு அமைப்பின் பெரும்போர் நிகழ்வுகளுக்குக்

குறியீடுகளாகும்.இத்தகைய இனக்குழு அமைப்புக்கள் சிதைந்து ஒரு வல்லமைமிக்க 'பேரரசு' என்ற அமைப்பிற்குள் அவை கலந்து கரைந்து விடுகின்ற ஒரு காலகட்டத்திலேயே சிலப்பதிகாரம் தோன்றியுள்ளது. அப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தின் அரசியலை உள்வைத்துச் சமூக முரண்பாடுகளைச் சமப்படுத்தும் அதே வேளையில் ஒற்றைக்குவிமைய அதிகாரப் பேரரசின் உருவாக்கத்திற்கும் வழிவகுத்துள்ளது. இதனைப் பதிகத்தின் உண்மைகள் புலப்படுத்துகின்றன.

பதிகத்தின் மூன்று நோக்கங்களில் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று என்பதும், ஊழ்வினையும் ஒன்றோடொன்று பிணைந்து பேரரசு அமைப்பில் மன்னன் தவறு செய்யமாட்டான்; மன்னன் குற்றமற்றவன் என்பதை மக்களிடையே பரப்பல் செய்கின்றன. மன்னரது தவற்றினால் நிகழ்ந்துவிட்ட கோவலன் கொலையை மறைத்துப் பல்வேறு காரணங்களைக் கற்பிதம் செய்து கூறுகின்றன.விளிம்புநிலை மக்களைப் பேரரசின் குவிமைய அரசியலுக்குள் ஒன்றிணைக்க முயலும் சிலப்பதிகாரம், வணிகக் குடிமகளான கண்ணகியின் (உயர்குடிப்பெண்) கற்பு மேம்பாட்டினையே சிறப்பித்துப் பேசுகின்றன. கவுந்தியடிகள், மாதரி, சாலினி ஆகிய சிலப்பதிகாரப் பெண்பாத்திரங்கள் கண்ணகியின் கற்புமேம்பாட்டை விதந்தும் சிறப்பித்தும் பேசுகின்றனர். இவர்கள் அனைவரும் சிலம்பின் விளிம்புநிலை மக்கள் ஆவர்.

சான்றாகச் சிலம்பின் வேட்டுவ வரியின் இறுதியில் பாண்டிய மன்னன் பற்றிய செய்தி ஒன்று வருகின்றது. 'வேதங்களை அருளிய சிவபெருமானுக்குப் பின்னோக்கிய அகத்தியன் தங்கியிருக்கும் பொதியமலைக்கு உரியவன் பாண்டிய மன்னன். அவன் பகைவருடைய முனை இடமும் அவர்தம் நிரைமீட்கும் தொழிலும் பாழ்படும் வகையில் வெற்றியை விரும்பி வெட்சி மாலையைக் சூடுவோனாகுக' எனப் பாண்டிய மன்னனை வாழ்த்துவதாக அமைந்துள்ளது. வேட்டுவ வரியின் தொடக்கப்பகுதியில் தெய்வமேறிய சாலினி,

***"இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி***
***தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து***
***ஒருமா மணியாய் உலகிற்கோங்கிய***
***திருமா மணியெனத் தெய்வ முன்றுரைப்ப"*** [10]

எனக் கண்ணகியின் கற்பு மேம்பாட்டினைப் பேசுவதைக் கூறலாம்.

**முடிவுரை**

சிலப்பதிகாரக் காப்பியத்தின் பதிகங்களின் மூன்று உண்மைகளை மறுவாசிப்புச் செய்யும்போது, அவை பேரரசு உருவாக்கத்தின் அடிப்படைகளைக் கொண்டிருப்பதும், அரச குடியினரின் பெருமைகளைப் பேசுவதும், வணிகக் குடியைச் சேர்ந்த கண்ணகியின் கற்பின் மேம்பாட்டினைப் புலப்படுத்துவதும் தெரிய வருகின்றன. இவை பற்றிய ஆய்வு மிகவும் நீண்டதாகும்.

**குறிப்புகள்**

1. சிலம்பு.பதிகம்.வரி:12-13
2. தொ.மு.சி.ரகுநாதன், இளங்கோவடிகள் யார்?. ப.88
3. சிலம்பு.பதிகம்.வரி: 55-57
4. சிலம்பு.கொலை.வரி.150-152
5. சிலம்பு.வழக்குரை.வரி: 78-83
6. சிலம்பு.காட்சி.வரி:98-99
7. சிலம்பு.காட்சி.95-97
8. சிலம்பு.காட்சி.வரி.100-104
9. சிலம்பு.வழக்குறை.வரி.51-55
10. சிலம்பு.வேட்டுவவரி.வரி.47-50

## பயன்பட்ட நூல்கள்


[1] அருணாசலம், ப., சிலப்பதிகாரச் சிந்தனை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1971.

[2] ஆறுமுகநாவலர் (உரை.ஆ.), இளங்கோவடிகளருளிச் செய்த சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சா. பதிப்பு, சென்னை, 2008.

[3] இராமகிருஷ்ணன், எஸ்., இளங்கோவின் பாத்திரப்படைப்பு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., சென்னை, 2015.

[4] இளவரசு, சோம., காப்பியத்திறன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1987.

[5] சஞ்சீவி, ந., சிலப்பதிகார விருந்து, தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை, 2014.

[6] சிதம்பரனார், சாமி., சிலப்பதிகாரத் தமிழகம், அறிவுப் பதிப்பகம், சென்னை, 2008.

[7] சிவஞானம், ம.பொ., சிலப்பதிகாரத் திறனாய்வு, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 2007.

[8] சுப்பிரமணியம், வி.அய்., காப்பியக் கட்டுரைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1987.

[9] பழநி, ஆ., சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பு, தமிழினி பதிப்பகம், சென்னை, 2007.

[10] மார்க்கப்பந்து சர்மா, சிலப்பதிகார ரசனை, வ.உ.சி.நூலகம், சென்னை, 2005.

[11] ஜகந்நாதன், கி.வா., தமிழ்க் காப்பியங்கள், முல்லை நிலையம், சென்னை, 2014.